<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காஞ்சிபுரம்.</u>

## <u>அசல் வழக்கு எண் 263/2019</u>

2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 24ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1879 ஆம் ஆண்டின் 10-வது சட்ட விதிகளின் படி திருமதி.ஆர்.ஈஸ்வரி, Grade III B.C அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | :: | சேகர் | தொழில் | :: | |
| தந்தை / கணவர் பெயர் | :: | கெஜராஜன் | கிராமம் | :: | |
| வயது | :: | 67 | வட்டம் | :: | காஞ்சிபுரம் |
| நேரம் | :: | முற்பகல் 11.10 முதல் 11. 35வரை | | :: | |

<u>வா.த.சா. 1 முதல் விசாரணை</u>

நான் வாதி தரப்பு சாட்சி. என்னுடைய சாட்சியத்தை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையொப்பங்கள் என்னுடையது. அதிலுள்ள சங்கதிகள் நான் சொல்லி எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. கடந்த 07.03.1995 அன்று முருகேசன் என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்ற ஆவணம் நகல் வாதசாஆ1. தாவா சொத்திற்கான பட்டா எண் என் பெயரில் உள்ளது. தாவா சொத்திற்கான என் பெயரில் வழங்கப்பட்ட பட்டா வாதசாஆ2. தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கான கட்டிட வரைபட நகல் வாதசாஆ3. பிரதிவாதிகள் என்னை மிரட்டி கடந்த 30.10.2013 அன்று எழுதி வாங்கிய அடமான கடன் பத்திரம் அசல் வாதசாஆ4. கடந்த 29.10.2018 அன்று நான் 1ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொது அதிகார ஆவணம் சான்றிட்டநகல் வாதசாஆ5. கடந்த 11.02.2019 அன்று 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த ஈடு கட்டிய அடமான கடன் பைசல் ரசீது வாதசாஆ6. கடந்த 11.02.2019 அன்று 1ம் பிரதிவாதி வெங்கடேசன் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த கிரையபத்திரம் சான்றிட்ட நகல் வாதசாஆ7. கடந்த 06.02.2012 அன்று

LIC ல் எனக்கு கொடுத்த ரசீது வாதசாஆ8. 1 முதல் 3 வரை உள்ள பிரதிவாதிகள் பெயரில் உள்ள தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழ் வாதசாஆ9. கடந்த 06.12.1998 அன்று எனது மனைவி கோமளா, கஸ்தூரி என்பவரிடமிருந்து பெற்ற கிரைய ஆவணம் அசல் வாதசாஆ10. எனது வீட்டிற்கான புகைப்படம் மற்றும் குறுந்தகடு வாதசாஆ11. ( புகைப்படம் எண்ணிக்கை 3) தாவாப்படி தீர்ப்பாக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.